   Notice of the AGM and Annual Report 2025-26 are available on the Company's website i.e. www.owmnahar.com, website of CDSL i.e. www.evotingindia.com and website of the Stock Exchanges i.e. National Stock Exchange of India Ltd. at www.nseindia.com and BSE Ltd. at www.bseindia.com.

2. **Book Closure:** Notice is also hereby given pursuant to Section 91 of the Companies Act, 2013 read with Regulation 42 of Listing Regulations that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from **5th September, 2026 to 9th September, 2026** (both days inclusive) for the purpose of payment of dividend. The dividend, if approved at the AGM, will be paid to shareholders, whose names shall appear in the Register of Members as on 4th September, 2026 or Register of Beneficial Owners, maintained by the Depositories as at the close of 4th September, 2026.

3. **E-voting:** Notice is also hereby given pursuant to Section 108 of the Companies Act, 2013 read with the Rules made thereunder and Regulation 44 of the Listing Regulations that Company is providing facility of remote e-voting and e-voting during the AGM to all shareholders for transacting the Business as mentioned in the Notice convening 38th AGM of the Company. The Company has provided a platform of Central Depository Services (India) Limited (CDSL) at www.evotingindia.com for e-voting. The members attending the AGM through VC/OAVM facility and who have not cast their vote by remote e-voting are entitled to vote during the AGM via e-voting. Members may participate in the AGM even after exercising their right to vote through Remote e-voting but shall not be entitled to vote again. Members who are holding shares in physical form or who have not registered their e-mail address with the Company can contact the Company Secretary of the Company at secnel@owmnahar.com for receiving the Notice and Annual Report for casting their vote through remote e-voting or e-voting system during the AGM.

   The Remote e-voting period shall commence on **Tuesday, 22nd September, 2026 at 9:00 a.m. and close on Thursday, 24th September, 2026 at 5:00 p.m.** The Remote e-voting shall not be allowed beyond the above mentioned date and time. The cut-off date for the purpose of determining the eligibility of members for remote e-voting and e-voting during the AGM is **18th September, 2026**. Any person, who becomes the member of the company after dissemination of the Notice of the Meeting and holding shares on the cut-off date, may obtain the User id and password by sending request at e-mail: secnel@owmnahar.com.

   All grievances connected with the facility for e-voting may be addressed to Mr. Rakesh Dalvi, Sr. Manager at (CDSL) Central Depository Services (India) Limited, A Wing, 25th Floor, Marathon Futurex, Mafatlal Mill Compounds, N M Joshi Marg, Lower Parel (East), Mumbai - 400013 or email at helpdesk.evoting@cdslindia.com or call on toll free no. 1800-21-09911. In case of any query/grievances related to e-voting, please contact Ms. Sakshi Maheshwari, Company Secretary of the Company at Registered Office address or through email-gredressalnpfl@owmnahar.com and Phone No. 0161- 5066265.

4. **KYC and Electronic payment of Dividend:**

- Members are informed that SEBI Master Circular No. HO/38/13/(4)2026-MIRSDPOD/I/4298/2026 dated February 6, 2026 has mandated for furnishing/ updating PAN, KYC details (Address, Mobile No., E-mail ID, Bank Details) and Nomination details by all the holders of physical securities in listed company in the prescribed forms as available on the Company's website at https://www.owmnahar.com/nahar_polyfilm/kyc_updation.php.
- SEBI vide its various circulars has mandated that dividend to security holders (holding securities in physical form), shall be paid only through electronic mode. Hence, shareholders are requested to update their PAN, contact details including mobile number, bank account details and specimen signature with the Company at its Registered Office or Company's RTA: M/s. Alankit Assignments Limited, Unit: Nahar Poly Films Limited, Alankit House, 4E/2, Jhandewalan Extension, New Delhi-110055 at the earliest in order to avoid any delay in receipt of dividend.
- Members holding shares in demat form and who have not updated their bank account details, are requested to update their bank account details with their respective Depository Participants.

The Company shall declare the results of the voting within two working days from the conclusion of AGM and the results declared alongwith Scrutinizer's Report shall be updated on Company's website: www.owmnahar.com and website of CDSL: www.evotingindia.com and shall simultaneously be submitted to the Stock Exchanges i.e. NSE and BSE.

By order of the Board
For Nahar Poly Films Limited
Sd/-
(Sakshi Maheshwari)
Company Secretary & Compliance Officer
ICSI Membership No. A79236

Date: August 31, 2026
Place: Ludhiana

வீட்டின் கதவை உடைத்து பணம், வெள்ளிப் பொருட்கள் கொள்ளை!

கோவை, செப். 2–

கோவை ஆர்.எஸ்.புரம் வெங்கடாசலம் காலனி பகுதியில் வசித்து வருபவர் சூரிய நாராயணன் (55), ராமநாதனின் மகன். இவர் நேற்று முன்தினம் தனது வீட்டின் முன்பக்க மற்றும் பின்பக்க கதவுகளை வழக்கம்போல் பூட்டிவிட்டு குடும்பத்தி னருடன் தூங்கச் சென்றார்.

நேற்று காலை 6.30 மணியளவில் எழுந்து பார்த்தபோது, வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதை கண்டு பேரதிர்ச்சி அடைந்தார். உடனடியாக வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது, பூஜை அறையில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் சிதறிக் கிடந்தன.

அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய வெள்ளி குத்துவிளக்கு, ஒரு சிறிய வெள்ளி குத்துவிளக்கு மற்றும் பல்வேறு வெள்ளிப் பாத்திரங்கள், பொருட்கள் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது. மேலும் வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரொக்கப் பணம் ரூ.40 ஆயிரத்தையும் மர்ம நபர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். நள்ளிரவில் வீட்டின் பின்பக்கம் ஆள்நடமாட்டம் இல்லாததை நோட்டமிட்ட மர்ம நபர்கள், கதவை பலவந்தமாக உடைத்து உள்ளே புகுந்து கைவரிசை காட்டியுள்ளனர்.

இதுகுறித்து சூரிய நாராயணன் ஆர்.எஸ்.புரம் போலீஸ் நிலையத்தில் உடனடியாக புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைரேகை நிபுணர்கள் உதவியுடன் தடயங்களை சேகரித்தனர். சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து தப்பி ஓடிய மர்ம திருடர்களை போலீசார் வலைவீசி தீவிரமாக தேடி வருகின்றனர்.

நாம் தமிழர் கட்சி சார்பில் கோவை சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி எஸ்.எஸ்.காலனி பகுதியில் நடைபெற்ற வீரப்பெரும் பாட்டன் புலித்தேவன், தமிழ் தேசியப் போராளி தமிழரசன், அனிதா ஆகியோரின் நினைவு நாளையொட்டி மலர் வணக்க நிகழ்வு நடைபெற்றது.

மூக்கில் ரத்தம் வடிந்த நிலையில் பெண் சடலம் மீட்பு!

கோவை, செப். 2–

கோவை கவுண்டம்பாளையம் அத்வானி நகர் கதவு பகுதியில் வசித்து வந்தவர் ராமச்சந்திரனின் மனைவி பூங்கொடி (வயது 55). இவர் கட்டிட வேலை உள்ளிட்ட கூலித் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். இவரது மகன் குணசேகரன் (20). பூங்கொடி கடந்த 10 ஆண்டுகளாக தீவிரமாக மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையாகி,அதனால்உடல்நலம் பாதிக்கப் பட்டு அவதிப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பூங்கொடி கடுமையான போதையில் வீட்டில் இருந்துள்ளார். நேற்று காலை அவரது மகன் குணசேகரன் வந்து பார்த்தபோது, பூங்கொடி வீட்டில் அசைவற்று கிடந்துள்ளார்.

அதிர்ச்சி யடைந்து அருகில் சென்று பார்த்தபோது, அவரது மூக்கில் இருந்து ரத்தம் வடிந்த நிலையில் சடலமாக கிடப்பது தெரியவந்தது. தாயின் உடலை பார்த்து மகன் கதறி அழுதார். தகவல் அறிந்து கவுண்டம் பாளையம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடலை மீட்டு பிரேதப் பரி சோதனைக்காக கோவை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். அளவுக்கு அதிகமான மதுப்பழக்கத்தால் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக ரத்த வாந்தி எடுத்து இறந்தாரா அல்லது அவரது இறப்பில் வேறு ஏதேனும் மர்மம் உள்ளதா என்ற கோணத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

உள்ளாடைக்குள் மறைத்து 10 கிராம் தங்கக்கட்டி கடத்தல்!

நகை நிறுவன ஊழியர் பிடிபட்டார்!!

கோவை, செப். 2–

கோவை மேட்டுப்பாளையம் சாலை ராக்கிபாளையம் பகுதியில் பிரபல தங்க நகை தயாரிப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றி வருபவர் முனியாண்டி (52), பாண்டியனின் மகன்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அதிகாரி முனியாண்டியும் சக செக்யூரிட்டி கார்டான ரிப்பன் தேவ் நாத்தும் ஆலை நுழைவு வாயில் பகுதியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நிறுவனத்தின் ஆர்.எஃப் மற்றும் ஆர்.சி பிரிவில் பணிபுரியும் ஊழியரான ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அக்கிரா மேசி கீழத்தெருவைச் சேர்ந்த கோவிந்தன் (வயது 29), முத்துக்கருப்பனின் மகன் என்பவர் பணி முடிந்து வெளியே செல்ல முயன்றார்.

அவரை பாதுகாப்பு ஊழியர்கள் மெட்டல் டிடெக்டர் மூலம் வழக்கம் போல் பரிசோதித்தனர். அப்போது கோவிந்தனின் உள்ளாடை பகுதி அருகே சென்றபோது கருவி தொடர்ந்து அபாய ஒலி எழுப்பியது. இதனால் பலத்த சந்தேகமடைந்த பாதுகாப்பு அதிகாரிகள் அவரை தனி அறைக்கு அழைத்துச் சென்று அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது அவர் தனது உள்ளாடைக்குள் ரகசியமாக மறைத்து வைத்திருந்த 10.100 கிராம் எடையுள்ள சுத்த தங்கக் கட்டியை கையும் களவுமாக பிடித்தனர். விசாரணையில் ஆலையில் இருந்து தங்கத்தை திருடி மறைத்து எடுத்துச் செல்ல முயன்றதை கோவிந்தன் ஒப்புக்கொண்டார். உடனே அவரிடமிருந்து தங்கக் கட்டி பறிமுதல் செய்யப்பட்டு துடியலூர் போலீசில் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து கோவிந்தனை முறைப்படி கைது செய்தனர்.

தனியார் ஊழியர் விபத்தில் பலி!

காங்கேயம், செப்.2

ஊதியூரை அடுத்த எல்லப்பாளையம்புதூர் ஊராட்சி கவுண்டம்பாளையத்தை சேர்ந்தவர் அருண் பிரசாத், (28)தனியார் கம்பெனியில் சூப்பர்வைசர். வேலை முடிந்து நேற்று நள்ளிரவில் ஸ்பிளண்டர் பைக்கில் வீட்டுக்கு திரும்பினார். வஞ்சிப்பாளையம் அருகே கட்டுப்பாட்டை இழந்த பைக் சறுக்கியதில் பலத்த காயமடைந்தார். மேல் சிகிச்சைக்காக ஈரோடு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார். ஊதியூர் போலீசார் விசாரிக்கின்றனர்.

ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில்

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சி!

பெ.நா.பாளையம், செப்.2–

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ. சௌந்தரராஜன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, சொல்லின் செல்வர், சிந்தனைக் கவிஞர் கவிதாசன், இயக்குநர், ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கோவை, முதலாம் ஆண்டு மாணவர்களிடையே சிந்தனையைத் தூண்டும் வகையிலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், எதிர்கால இலக்குகளை நோக்கி அவர்களை உத்வேகப்படுத்தும் வகையிலும் சிறப்புரையாற்றினார்.

தமது சிறப்புரையில், இன்றைய போட்டிமிக்க உலகில் கல்வித் தகுதி மட்டுமே போதுமானதல்ல என்றும், தொழில்நுட்ப அறிவு, தகவல் தொடர்புத் திறன், படைப்பாற்றல், தலைமைத்துவப் பண்பு மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறன் ஆகியவற்றையும் மாணவர்கள் ஒருங்கிணைந்து வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில், முதலாம் ஆண்டு கல்வித் திட்டத்தின் பேராசிரியர் தலைவர் டாக்டர் சக்தி வேல் ஆறுசாமி, இணைத் தலைவர் டாக்டர் விசித்ரா சிவாஜி ஆகியோருடன் கல்லூரியின் பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தண்ணீர் தொட்டிக்குள் தவறி விழுந்து மூதாட்டி பரிதாப பலி!

கோவை, செப். 2–

கோவை வெள்ளலூர் இடையர்பாளையம் பகுதியில் வசித்து வந்தவர் சுந்தர்ராஜனின் மனைவி நகரத்தினம் (68). இவரது மகன் ஜெகதீஷ் (36). நகரத்தினம் தனது குடும்பத்துடன் வசித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் வழக்கம் போல் உணவருந்திவிட்டு தூங்கச் சென்றார்.

நேற்று அதிகாலை 6 மணியளவில் குடும்பத்தினர் எழுந்து பார்த்தபோது, படுக்கையில் நகரத்தினத்தை காணவில்லை. வீட்டின் அறை மற்றும் முற்றம் உள்ளிட்ட இடங்களில் தேடியபோது, வீட்டின் வளாகத்தில் உள்ள தரைமட்டதண்ணீர்தொட்டிக்குள் நகரத்தினம் தண்ணீரில் மூழ்கி கிடப்பதை கண்டு குடும்பத்தினர் கூச்சலிட்டனர். உடனடியாக அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அவரை தண்ணீர் தொட்டியில் இருந்து வெளியே தூக்கி எடுத்தனர். தொடர்ந்து ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த மருத்துவ உதவியாளர்கள் நகரத்தினத்தின் உடலை பரிசோதித்து விட்டு, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். தகவலறிந்த போத்தனூர் போலீசார் விரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். அதிகாலையில் இயற்கை உபாதையை கழிக்கச் சென்றபோது நிலைதடுமாறி தண்ணீர் தொட்டியில் விழுந்து மூழ்கி இறந்தாரா என்பது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

ஈரோடு நசியனூர் விநாயகர் சதுர்த்திக்கு தயாராகும் சிலைகளை படத்தில் காணலாம்.

மூதாட்டியிடம் நகை பறித்த கல்லூரி மாணவி, மாணவர் கைது!

கோவை, செப். 2–

சொகுசு வாழ்க்கை, கார் வாங்க முகமூடி அணிந்து மூதாட்டியிடம்நகைபறித்த கல்லூரி மாணவி, மாணவரை போலீசார் கைது செய்தனர்.

கோவை போத்தனூர் வெள்ளலூர் பகுதியை சேர்ந்தவர் சரஸ்வதி (70). இவர் கடந்த 30ம் தேதி வீட்டின் முன்பு தனது உறவினர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது கருப்பு நிற மாஸ்க் அணிந்து வந்த வாலிபர் ஒருவர், அங்குள்ள பல் சிகிச்சை கிளினிக் எப்போது திறப்பார்கள் என கேட்டு பேச்சுக் கொடுத்துள்ளார். தொடர்ந்து மருத்துவரின் வீடு எங்குள்ளது எனக் கேட்டுள்ளார். சரஸ்வதி, மருத்துவரின் வீடு உள்ள திசையை காண்பித்தபோது, திடீரென அவரது கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தங்கச் செயினை பறித்தார். அதில், சரஸ்வதி நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அந்த வாலிபரை பிடிக்க முயற்சித்த போது அருகில் ஸ்கூட்டரில் தயாராக இருந்த ஒரு பெண்ணுடன் தப்பிச் சென்றார். இதுகுறித்து சரஸ்வதி போத்தனூர் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

தொடர்ந்து தெற்கு துணை கமிஷனர் கார்த்திகேயன் உத்தரவின்படியும், போத்தனூர் உதவி கமிஷனர் வசந்தராஜன் வழிகாட்டுதலின்படி, இன்ஸ்பெக்டர் அசோக்குமார் தலைமையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகள் தீவிரமாக ஆய்வு செய்து நகை பறிப்பில் ஈடுபட்டவர்களை தேடி வந்தனர். அதில் குற்றச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஸ்கூட்டரின் பதிவு எண் கண்டு பிடிக்கப்பட்டது.

தொடர் விசாரணையில் செயின் பறிப்பில் ஈடுபட்டது திருப்பூரை சேர்ந்த பரணிதரன் மற்றும் அவரது காதலி நெல்லையை சேர்ந்த சிந்து (21) என்பதும், இவர் தனியார் கல்லூரி 2ம் ஆண்டு எம்.பி.ஏ ஒன்றாக படித்து வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து போலீசார் கல்லூரி விடுதியில் தங்கி இருந்த பரணிதரன் மற்றும் வெளியே அறை எடுத்து தங்கி இருந்த சிந்து அகிய 2 பேரையும் மடக்கி பிடித்துபோலீஸ்ஸ்டேஷன் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். அதில் அவர்கள் மூதாட்டி சரஸ்வதியிடம் செயின் பறித்ததை ஒப்புகொண்டனர். தொடர்ந்து போலீசார் அவர்களை கைது செய்தனர்.

மேலும், இருவரையும் விரைந்து கைது செய்த தனிப்படையினரின் சிறப்பான பணியை உயர் அதிகாரிகள்பாராட்டினர்நகையை பறிகொடுத்த சரஸ்வதி, 24 மணி நேரத்திற்குள் தீவிரமாக செயல்பட்டு இருவரையும் கைது செய்து நகையை மீட்ட போலீசாருக்கு நன்றி தெரிவித்தார். இதற்கிடையே கைது செய்யப்பட்ட மாணவ மாணவியின் பெற்றோர் அவர்களை பார்த்து கண்ணீர் வடித்தனர்.

கே.525,கோயம்புத்தூர் நகர் வளர்ச்சி கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிட்,

வள்ளலார் நகர், ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்– 641016.

பொதுப்பேரவைக் கூட்ட அறிவிப்பு

அன்புடையீர் வணக்கம்,

2026–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் சங்க அலுவலக வளாகத்தில் நடைபெறும் சங்கத்தின் பேரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படவுள்ளதால், சங்கத்தின் “அ” வகுப்பு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்கள்

1.பதிவாளர் (வீட்டுவசதி) சென்னை மற்றும் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் சுற்றறிக்கையின்படி இறந்த மற்றும் தகுதியற்ற உறுப்பினர்களின் பெயரில் உள்ள பங்குகளை கொடுபட வேண்டிய அனாமத்து கணக்கிற்கு கொண்டு செல்வது மற்றும் நீக்கம் செய்வது குறித்து ஆலோசித்தல்.

2.நாளது தேதி வரை சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு பங்கு அனாமத்து கணக்கில் தொகை செலுத்திய நபர்களை “அ” வகுப்பு உறுப்பினர்களாக அங்கீகரிப்பது மற்றும் மேற்படி தொகைகளை பங்குத் தொகை கணக்கிற்கு மாற்றம் செய்வது குறித்து ஆலோசித்தல்.

3.2024–2025ம் ஆண்டின் கூட்டுறவு இறுதி தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் பெறுதல்.

4.2025–2026ம் ஆண்டு மற்றும் 01.04.2026 முதல் 31.08.2026 வரை உள்ள வரவு செலவுகளை அங்கீகரிப்பது குறித்து ஆலோசித்தல்.

5.2024–2025ம் ஆண்டில் ஈட்டியுள்ள இலாபத்தினை கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகளின்படி இலாப பிரிவினை செய்வது குறித்து ஆலோசித்தல்.

6.சங்க செயலாளருக்கு தீபாவளி பண்டிகைக்கு போனஸ்: வழங்கியது ஒப்புதல் அளிப்பது தொடர்பாக.

7.கோயம்புத்தூர்மண்டலகூட்டுறவுசங்கங்களின்துணைப்பதிவளர் (வீட்டுவசதி) அவர்களின் செயல்முறை ஆணையின்படி சபரி செக்யூரிட்டி சர்வீஸ் மூலம் அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலக பாதுகாவலர் நியமனம் செய்தது ஒப்புதல் அளித்தல் மற்றும் மேற்படி ஆணையை வாசித்து பதிவு செய்வது தொடர்பாக.

8.கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் சங்க உறுப்பினர்களுக்கு கொடுபடாமல் உள்ள பங்கு ஈவு தொகையை கூட்டுறவு சட்ட விதிகளின் சேமநிதிக்கு எடுத்து சொல்ல பேரவையின் ஒப்புதல் பெறுவது தொடர்பாக,

9.சங்க செயலாட்சியர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர பொருள்கள்.

இடம்:கோயம்புத்தூர்
நாள்:02.09.2026

செயலாளர் **செயலாட்சியர்**

KOVAICO-OPPUBLICITIES-206/2026–2027

மாண்புமிகு 4-வது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.
(FOR M.C.O.P.CASES)
M.C.O.P.No: 134 / 2026

பாலவெங்கடேஷ்,
S/o.திருப்பதி, க.எண்.2/521 D2,
பாலாஜி நகர்,
போடிபாளையம் ரோடு,
மலுமிச்சம்பட்டி,
கோயம்புத்தூர்-641050
----மனுதாரர்.
---எதிரிடை---
பாபு,
S/o.செல்வராஜ்,
கதவு எண்.8/144, கிள்குண்டா,
குண்டா பாலம், குண்டா,
நீலகிரி.
---1-ம் எதிர்மனுதாரர்.

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் இழப்பீடு கோரி தாக்கல் செய்திருக்கும் வழக்கில் ஷை 1-ம் எதிர்மனுதாரர் ஆஜராக 01.10.2026-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. சமூகம் நீதிமன்றத்தில் அன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறினால் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கும் என்று அறிவிக்கப் படுகிறது.

ராம்குமார்,B.A.,L.,
R.ராஜ் பிரபாகரன்,B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், மதுரை.

உயர்திரு வருவாய் கோட்டாசியர் அவர்கள், கோவை வடக்கு

திரு. S.ராஜ்குமார்
த/பெ. சண்முகம்,
206/110, 6வது வீதி, கணபதி புதூர்,
கணபதி, கோவை-641006.
...மனுதாரர்
- எதிர் -
1. வருவாய் கோட்டாசியர் அவர்கள் கோவை வடக்கு
2. வருவாய் வட்டாட்சியர் அவர்கள் கோவை வடக்கு
...எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மகள் செல்வி.**R.நித்தியஸ்ரீ** த/பெ.S.ராஜ்குமார் அவர்கள் கடந்த 22.08.2023 அன்று 206/110, 6வது வீதி, கணபதி புதூர், கணபதி, கோவை-641 006 என்ற விலாசத்தில் மரணம் அடைந்த தற்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணபித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இவ்வறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாசியர் சமூகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரர் கோரியபடி மனு உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

வருவாய் கோட்டாசியர்
கோவை வடக்கு

சிமாக் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட்

SEMAC

(முன்னர் சிமாக் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN: L42900TZ1977PLC000780
பதிவு அலுவலகம்: பொள்ளாச்சி சாலை, மலுமிச்சம்பட்டி அஞ்சல்,
கோயம்புத்தூர் – 641 050 E–mail: compliance.officer@semacconstruction.com
Website: www.semacconstruction.com Phone: 0422 6655100

அறிவிப்பு

ஆகஸ்ட் 14, 2026 தேதியிட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகங்களை மேற்கொள்வதற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான 49–வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 03:00 மணிக்கு காணொளி காட்சி ("VC") / பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DPs) / நிறுவனம் / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ஆகியோரால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேடு / பலனடையும் உரிமையாளர்களின் (Beneficial owners) பதிவேட்டில், ஆகஸ்ட் 18, 2026 அன்று வணிக நேர முடிவில் பெயர் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்களுக்கான 49–வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் 2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை அனுப்பப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் ('SEBI பட்டியலிடல் விதிமுறைகள், 2015') விதி 36 (1) (b)–ன்படி, நிறுவனம் அல்லது ஏதேனும் டெபாசிட்டரி அல்லது நிறுவனத்தின் பதிவாளர் & பங்கு பரிமாற்ற முகவரான (RTA) MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகியோரிடம் தங்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு, வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கும் சரியான பாதை உள்ளிட்ட இணைய இணைப்பு (web–link) அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களை அனுப்பும் பணி செப்டம்பர் 01, 2026 அன்று நிறைவடைந்தது.

நடைபெறவிருக்கும் AGM–ன் அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான https://semacconstruction.com/–லும், பங்குச்சந்தைகளின் இணையதளங்களான அதாவது BSE லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கின்றன. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும், மேற்படி AGM தேதி வரை அனைத்து வேலை நாட்களிலும் வழக்கமான வணிக நேரமான காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பதிவு அலுவலகத்தில் ஆய்வுக்குக் கிடைக்கும்.

கட்–ஆஃப் தேதியான செப்டம்பர் 18, 2026 அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது பலனடையும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியையோ அல்லது AGM–ன் போது வாக்களிக்கும் வசதியையோ பெற தகுதியுடையவர் ஆவார்.

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் விதி 20 மற்றும் SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 44 ஆகியவற்றுடன் நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108–ன் விதிகளுக்கு இணங்க, உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிப்பு வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது. MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL) வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) வசதியை நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு அவர்களின் “InstaVote” இணையதளம் மூலமாக வழங்குகிறது. AGM அறிவிப்பில் மின்னணு வாக்குப் பதிவு மூலம் வாக்களிப்பதற்காக அச்சிடப்பட்டுள்ள வழிமுறைகளை கவனமாகப் படிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1.	அறிவிப்பு / வருடாந்திர அறிக்கை அனுப்பி முடிக்கப்பட்ட தேதி	01 செப்டம்பர் 2026
2.	தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம்.	22 செப்டம்பர் 2026 காலை 9.00 மணி.
3.	தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவடையும் தேதி மற்றும் நேரம் (இந்தத் தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படாது).	24 செப்டம்பர் 2026 மாலை 5.00 மணி
4.	மின்னணு வாக்களிப்பிற்கு தகுதியான உறுப்பினர்களைத் தீர்மானிப்பதற்கான கட்–ஆஃப் தேதி	18 செப்டம்பர் 2026

AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு எவரேனும் நிறுவனத்தின் உறுப்பினர்களாகி, 18 செப்டம்பர் 2026 என்ற கட்–ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருந்தால், மின்னணு வாக்களிப்பு தளத்தை அணுகுவதற்கு AGM அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள விரிவான வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

24 செப்டம்பர் 2026 மாலை 05.00 மணிக்கு மேல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி அனுமதிக்கப்படாது, அதன்பிறகு வாக்களிப்பதற்கு MIIPL மூலம் அது முடக்கப்படலாம். ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தனது வாக்கைச் செலுத்திய உறுப்பினர், கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் ஆனால் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்; மீறி அவர் கூட்டத்தில் வாக்களித்தாலும் அது செல்லாததாகக் கருதப்படும்.

உள்நுழைவதில் (login) அல்லது மின்னணு வாக்களிப்பில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் பங்குதாரர்கள், enotices@in.mpms.mufg.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்புவதன் மூலமாகவோ அல்லது 022 – 4918 6000 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்வதன் மூலமாகவோ INSTAVOTE உதவி மையத்தை (helpdesk) தொடர்புகொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு மற்றும் கூட்டத்தில் நடைபெறும் வாக்குப்பதிவு ஆகியவற்றை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் கண்காணிப்பதற்காக, MDS & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், கோயம்புத்தூர் திரு. M D செல்வராஜ், FCS அவர்களை நிறுவனம் கண்காணிப்பாளராக (Scrutinizer) நியமித்துள்ளது. வாக்குப்பதிவின் முடிவை நிறுவனம் தனது இணையதளமான https://semacconstruction.com/–லும், MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL) இணையதளத்திலும் அறிவிக்கும், மேலும் இது BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றிற்கும் தெரிவிக்கப்படும். இந்தப் பொது அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளமான https://semacconstruction.com/, MIIPL–ன் இணையதளமான instavote.Mufgintime.co.in மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றின் இணையதளங்களிலும் கிடைக்கும்.

AGM–க்காக நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் புத்தகங்கள் செப்டம்பர் 19, 2026 சனிக்கிழமை முதல் செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமை வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சிமாக் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட்டிற்காக
(முன்னர் சிமாக் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
ஒப்பம்/–
ஆக்ரிதி குப்தா
நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி

தேதி: 01.09.2026
இடம்: குருகிராம்

ரேவதி எக்யூப்மெண்ட் இந்தியா லிமிடெட்

REL
REVATHI EQUIPMENT INDIA LIMITED

(முன்னர் ரெனைசான்ஸ் கார்ப்பரேட் கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : 331, பொள்ளாச்சி ரோடு, கோயம்புத்தூர் – 641 050, இந்தியா.
Phone : 0422 – 2610851, 0422 – 6655100, Fax : 0422 – 6655199
CIN No.: L74999TZ2020PLC033369 E–mail: finance@revathi.in Website: www.revathi.in

அறிவிப்பு

ஆகஸ்ட் 10, 2026 தேதியிட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகங்களை மேற்கொள்வதற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான 07–வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமை மாலை 05:00 மணிக்கு காணொளி காட்சி ("VC") / பிற ஆடியோ–காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DPs) / நிறுவனம் / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ஆகியோரால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேடு / பலனடையும் உரிமையாளர்களின் (Beneficial owners) பதிவேட்டில், ஆகஸ்ட் 18, 2026 அன்று வணிக நேர முடிவில் பெயர் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்களுக்கான 07–வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் 2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை அனுப்பப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் ('SEBI பட்டியலிடல் விதிமுறைகள், 2015') விதி 36 (1) (b)–ன்படி, நிறுவனம் அல்லது ஏதேனும் டெபாசிட்டரி அல்லது நிறுவனத்தின் பதிவாளர் & பங்கு பரிமாற்ற முகவரான (RTA) MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகியோரிடம் தங்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு, வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கும் சரியான பாதை உள்ளிட்ட இணைய இணைப்பு (web–link) அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களை அனுப்பும் பணி செப்டம்பர் 01, 2026 அன்று நிறைவடைந்தது.

நடைபெறவிருக்கும் AGM–ன் அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான https://revathi.in/–லும், பங்குச்சந்தைகளின் இணையதளங்களான அதாவது BSE லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com ஆகியவற்றிலும் கிடைக்கின்றன. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும், மேற்படி AGM தேதி வரை அனைத்து வேலை நாட்களிலும் வழக்கமான வணிக நேரமான காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பதிவு அலுவலகத்தில் ஆய்வுக்குக் கிடைக்கும்.

கட்–ஆஃப் தேதியான செப்டம்பர் 18, 2026 அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது பலனடையும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியையோ அல்லது AGM–ன் போது வாக்களிக்கும் வசதியையோ பெற தகுதியுடையவர் ஆவார்.

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் விதி 20 மற்றும் SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 44 ஆகியவற்றுடன் நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108–ன் விதிகளுக்கு இணங்க, உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிப்பு வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது. MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL) வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) வசதியை நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு அவர்களின் “InstaVote” இணையதளம் மூலமாக வழங்குகிறது. AGM அறிவிப்பில் மின்னணு வாக்குப் பதிவு மூலம் வாக்களிப்பதற்காக அச்சிடப்பட்டுள்ள வழிமுறைகளை கவனமாகப் படிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1.	அறிவிப்பு / வருடாந்திர அறிக்கை அனுப்பி முடிக்கப்பட்ட தேதி	01 செப்டம்பர் 2026
2.	தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம்.	22 செப்டம்பர் 2026 காலை 9.00 மணி.
3.	தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவடையும் தேதி மற்றும் நேரம் (இந்தத் தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படாது).	24 செப்டம்பர் 2026 மாலை 5.00 மணி
4.	மின்னணு வாக்களிப்பிற்கு தகுதியான உறுப்பினர்களைத் தீர்மானிப்பதற்கான கட்–ஆஃப் தேதி	18 செப்டம்பர் 2026

AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு எவரேனும் நிறுவனத்தின் உறுப்பினர்களாகி, 18 செப்டம்பர் 2026 என்ற கட்–ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருந்தால், மின்னணு வாக்களிப்பு தளத்தை அணுகுவதற்கு AGM அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள விரிவான வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

24 செப்டம்பர் 2026 மாலை 05.00 மணிக்கு மேல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி அனுமதிக்கப்படாது, அதன்பிறகு வாக்களிப்பதற்கு MIIPL மூலம் அது முடக்கப்படலாம். ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தனது வாக்கைச் செலுத்திய உறுப்பினர், கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் ஆனால் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்; மீறி அவர் கூட்டத்தில் வாக்களித்தாலும் அது செல்லாததாகக் கருதப்படும்.

உள்நுழைவதில் (login) அல்லது மின்னணு வாக்களிப்பில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் பங்குதாரர்கள், enotices@in.mpms.mufg.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்புவதன் மூலமாகவோ அல்லது 022 – 4918 6000 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்வதன் மூலமாகவோ INSTAVOTE உதவி மையத்தை (helpdesk) தொடர்புகொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு மற்றும் கூட்டத்தில் நடைபெறும் வாக்குப்பதிவு ஆகியவற்றை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் கண்காணிப்பதற்காக, MDS & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், கோயம்புத்தூர் திரு. MD செல்வராஜ், FCS அவர்களை நிறுவனம் கண்காணிப்பாளராக (Scrutinizer) நியமித்துள்ளது. வாக்குப்பதிவின் முடிவை நிறுவனம் தனது இணையதளமான https://revathi.in/–லும், MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL) இணையதளத்திலும் அறிவிக்கும், மேலும் இது BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றிற்கும் தெரிவிக்கப்படும். இந்தப் பொது அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளமான https://revathi.in/, MIIPL–ன் இணையதளமான instavote.Mufgintime.co.in மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றின் இணையதளங்களிலும் கிடைக்கும்.

AGM–க்காக நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் புத்தகங்கள் செப்டம்பர் 19, 2026 சனிக்கிழமை முதல் செப்டம்பர் 25, 2026 வெள்ளிக்கிழமை வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ரேவதி எக்யூப்மெண்ட் இந்தியா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
அபிஷேக் டால்மியா
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN: 00011958

தேதி : 01.09.2026
இடம் : கோயம்புத்தூர்

Edited, and Published by S. N. Selvam on behalf of M/s. Chennai Murasu Private Ltd, from No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006 and Printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No. 292, Old No. 1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore – 641 006. RNI Registration No. TNTAM/2016/75063.